பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

03 06 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடகிழக்கு மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

- தீவிரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் ஒருங்கிணைந்து பணியாற்றுவது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

- நாட்டில் தடையற்ற மின்சாரம், குறைந்த கட்டணத்தில் விநியோகிக்கப்படுவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

- தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்தநாளையொட்டி, செம்மொழி தமிழ் விருதுகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

- இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடகிழக்கு மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

அஸ்ஸாம் மற்றும் சிக்கிம் மாநிலங்களில் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அம்மாநிலங்களின் முதலமைச்சர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இம்மாநிலத்தின் தற்போதைய நிலவரம் குறித்து பிரதமர் விரிவாக கேட்டறிந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மாநில அரசு மேற்கொண்டுவரும் நிவாரணப்பணிகள் குறித்தும் பிரதமரிடம் எடுத்துரைத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, சிக்கிம் முதலமைச்சர் திரு பிரேம் சிங் தமாங், வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்வதில் மாநில அரசுக்கு உறுதுணையான மத்திய அரசின் நடவடிக்கைகளுக்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சிக்கிம் மாநிலம் **'Chaten '**பகுதியில் வெள்ளத்தில் சிக்கித்தவித்த சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்ட 34 பேர் ராணுவ ஹெலிகாப்டர் மூலம் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

மணிப்பூரில் இம்பால் உள்ளிட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அஸ்ஸாமின் பிரம்மபுத்திரா ஆற்றிலும், கர்பி மலைப்பகுதியிலும் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் காசிரங்கா தேசிய பூங்காவை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் **Sikar** மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**<<<<<>>>>>**

தீவிரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் ஒருங்கிணைந்து பணியாற்றுவது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

பிரேசில் நாட்டின் **Brazila-**வில் நடைபெறும் பிரிக்ஸ் நாடாளுமன்ற அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்க செல்லும் வழியில் போர்ச்சுக்கல் நாட்டின் லிஸ்பென் சென்ற அவர், அந்நாட்டு நாடாளுமன்ற அவைத்தலைவர் திரு **Jose Pedro Aguiar – Branco-** வை சந்தித்து பேசினார்.

அப்போது, தீவிரவாதத்தை இந்தியா ஒருபோதும் சகித்துக்கொள்ளாது என்று திரு ஓம். பிர்லா திட்டவட்டமாக எடுத்துரைத்தார்.

மேலும், இந்தியாவின் நாடாளுமன்ற நடவடிக்கைகள் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் வெளிப்படையானதாகவும், மக்கள் நலன் சார்ந்தும் மேற்கொள்ளப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா – போர்ச்சுக்கல் இடையே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, டிஜிட்டல் தொழில்நுட்பம், பாதுகாப்பு தளவாட உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டில் 24 மணிநேரமும் தடையற்ற மின்சாரம், குறைந்த கட்டணத்தில் விநியோகிக்கப்படுவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சூரியசக்தி மின்உற்பத்தி தொடர்பான ஆய்வறிக்கை ஒன்றை சுட்டிக்காட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சூரியசக்தி மின்சாரம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுவதன்மூலம் இது சாத்தியமாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சூரியசக்தி மின் உற்பத்தியால் நாட்டின் தொழில்துறை போட்டித்தன்மையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நீடித்த வளர்ச்சிக்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு உதாரணமாக இது அமைந்துள்ளது என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

உலக மிதிவண்டி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆரோக்கியமான வாழ்விற்கு சைக்கிள் பயிற்சி மேற்கொள்ள உறுதியேற்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

சைக்கிள் பயிற்சியை வாழ்க்கையின் ஒரு அங்கமாக பின்பற்றுவதன்மூலம், உடல் பருமன் பாதிப்பு இல்லாத இந்தியாவை உருவாக்க முடியும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான நாடாளுமன்ற அனைத்துக்கட்சி குழுவினர் பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைத்து வருகின்றனர்.

பிஜேபி உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர், லண்டனில் அந்நாட்டு அமைச்சர் திருமதி சீமா மல்கோத்ரா மற்றும் தொழிலாளர் கட்சி, கன்சர்வேட்டிவ் கட்சி தலைவர்களை சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து விளக்கிக்கூறினர்.

அப்போது, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு இங்கிலாந்து தலைவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சியின் திரு சசிதரூர் தலைமையிலான குழுவினர் பிரேசில் நாட்டில் தங்களது பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்கா புறப்பட்டு சென்றனர்.

இது குறித்து திரு சசிதரூர் அளித்த பேட்டியில், ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான உண்மை தகவல்களை அமெரிக்க தலைவர்களுக்கு எடுத்துரைக்க உள்ளதாக கூறியுள்ளார்.

சிவசேனாவின் திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழுவினர், ஆப்பிரிக்க நாடான லைபீரியாவில் அந்நாட்டு அதிபர் திரு **Joseph Nyuma Boakai** மற்றும் அந்நாட்டு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

திமுக-வின் திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினர் ஸ்பெயின் தலைநகர் **Madrid**-ல் அந்நாட்டு தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினரை சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைத்ததாக ஸ்பெயின் நாட்டுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய ஜனதாதளத்தின் திரு சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழுவினர் கோலாலம்பூரில், மலேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

இன்றுடன் தங்களது பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் அனைத்துக்கட்சி குழுவினர் புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேசவுள்ளனர்.

<<<<<<>>>>>

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 102-வது பிறந்தநாள் செம்மொழி நாளாக இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு, செம்மொழி தமிழ் விருதுகளை வழங்கியதுடன், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய நூல்களையும் வெளியிட்டார்.

மேலும், தமிழறிஞர்களுக்கு உயர்த்தப்பட்ட உதவித்தொகைக்கான அரசாணை மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகளையும் அவர் வழங்கினார்.

தமிழக அரசின் நான்காண்டு சாதனை மலரையும் இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் வெளியிட்டார்.

முன்னதாக, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கருணாநிதியின் சிலை அருகே வைக்கப்பட்டிருந்த அன்னாரது உருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியதை செலுத்தினர்.

<<<<<<>>>>>

ஆன் லைன் விளையாட்டுகளுக்கு கட்டுப்பாடு விதித்து தமிழக அரசு பிறப்பித்த விதிமுறைகள் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆன் லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன் லைன் விளையாட்டு ஒழுங்குமுறை சட்டத்தின்படி, இந்த விளையாட்டுகளுக்கு ஆதார் இணைப்பை கட்டாயமாக்கியும், நேரக்கட்டுப்பாடு விதித்தும் தமிழக அரசு புதிய விதிமுறைகளை வெளியிட்டது.

இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம் மற்றும் திரு கே ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு, ஆன் லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளதாக தெரிவித்துள்ளது.

ஆன்லைன் விளையாட்டுகள் ஏற்படுத்தும் எதிர்மறை பாதிப்புகளை கருத்தில்கொண்டு பார்த்தால், இந்த ஒழுங்குமுறை விதிகள் உடனடியாக தேவைப்படுவதாகவும் நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து அணையின் துணை கண்காணிப்புக்குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தென் மண்டல இயக்குனர் திரு கிரிதர் தலைமையிலான குழுவினர் இந்த ஆய்வை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***Sound Byte - தேனி ராஜ்குமார் - 43 Sec.***

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 22-20, 21-23, 21-15 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Nozomi Okuhara** –வை வென்றார்.

---------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டி துருக்கியின் அன்டாலியாவில் இன்று தொடங்குகிறது.

<<<<<<>>>>>